# மொனராகலை மாவட்ட முஸ்லிம் கிராமங்கள்: ஒரு வரலாற்றுப் பார்வை

அகமட் சர்ஜுன் ராசிக்
சிரேஷ்ட விரிவுரையாளர்,இஸ்லாமியக் கற்கைகள் துறை,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
sarjoonra@seu.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 9.7% ஆன முஸ்லிம்கள் சிறுபான்மையினராக தீவெங்கும் பரந்து வாழ்கின்ற அதேவேளை, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். மற்றும் சில மாவட்டங்களில் முஸ்லிம்கள் சொற்பமாக வாழ்கின்றனர். இதில் மொனராகலை மாவட்டமும் ஒன்றாகும். இங்கு 2.17% முஸ்லிம்கள் மாவட்டத்தின் 1324 மொத்தக் கிராமங்களில் 05 கிராமங்களில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். அலுப்பொத்த, பகினிகஹவெல, கொட்டபோவ, கனுல்வெல, மெதகம ஆகியவையே அக்கிராமங்களாகும். இவை தவிர இம்மாவட்டத்தில் பல முஸ்லிம் குக்கிராமங்களும் ஆரம்ப காலங்களில் முஸ்லிம்களால் கைவிடப்பட்ட சில கிராமங்களும் கணப்படுகின்றன. இதன் அடிப்படையில், இவ்வாய்வு, மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள முஸ்லிம் கிராமங்களின் தோற்றப் பின்னணி, அவற்றில் முஸ்லிம்களின் பரம்பல் என்பவற்றைக் கண்டறிதல் மற்றும் கைவிடப்பட்ட கிராமங்களை அடையாளப்படுத்தல் எனும் இரு பிரதான நோக்கங்களைக் கொண்டுள்ளது. மேற்படி நோக்கங்களை அடைவதற்காக இம்மாவட்ட முஸ்லிம் கிராமவாசிகளிடம் பரவியிருந்த செவிவழிக் கதைகள், கூற்றுக்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர பழைமைவாய்ந்த பள்ளிவாயல்கள், அடக்கஸ்தளங்கள், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் கால வீட்டுப்பாவனைப் பொருட்கள் என்பவற்றின் மூலமும் இக்கிராமங்கள் பற்றிய பல தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இக்கிராமங்கள், ஆரம்ப காலங்களில், கண்டி-கிழக்கு மற்றும் கண்டி-தென் மாகாணங்களின் வர்த்தகப் பாதைகளில் அமைந்துள்ளன என்பதனால் முஸ்லிம் வர்த்தகர்கள் தமது நெடுந்தூர பயணத்தின் போது ஓய்வெடுப்பதற்காக தரித்துச்சென்ற ஒவ்வொரு பிரதேசங்களும் கிராமங்களாக தோற்றம் பெற்றுள்ளன என்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு முஸ்லிம்கள் தமது இலகு வாழ்க்கை கருதி ஒரு பிரதேசத்திலிருந்து மற்றொரு பிரதேசத்தை நோக்கி நகர்ந்தமை பல கிராமங்களைத் தோற்றம் பெறச்செய்தும் மற்றும் சில கிராமங்களை கைவிடச்செய்துமுள்ளன என்பதும் தெளிவாகின்றது.

பிரதான சொற்கள்: மொனராகலை மாவட்டம், முஸ்லிம் கிராமங்கள், வரலாறு

## 1. அறிமுகம்

இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களுள் மொனராகலையும் ஒன்றாகும். இது இலங்கையின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ளது. 5639 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட (தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,2012)இம்மாவட்டத்தின் புவியியற் பிரதேசம் இலங்கையின் இரண்டாவது அதிகூடிய நிலப்பிராந்தியமாகக் காணப்படுகின்றது. கிழக்கே அம்பாறை, வடக்கே பதுளை, மேற்கே இரத்தினபுரி, தெற்கே ஹம்பாந்தோட்டை என்பவை இம்மாவட்டத்தின்எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாவட்டத்தில் 03 தேர்தல் தொகுதிகள்,11 பிரதேச சபைகள், 319 கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் 1324 கிராமங்கள் காணப்படுகின்றன (மொனராகலை மாவட்ட செயலகம், 2007). இது வரை மாநகர சபை, நகர சபைகள் இதில் அமையப்பெறவில்லை. இம்மாவட்டம் 1958 ஆம் ஆண்டு தனி அலகாகப் பிரிக்கப்பட்டது (Gwillim Law, 2003). அதற்கு முன்னர் பதுளையுடன் இணைந்ததாககாணப்பட்டது. மொனராகலை நகரம் இம்மாவட்டத்தின் தலைநகராகும்.

ஆரம்ப காலங்களில் மொனராகலைப் பிரதேசம் வெல்லஸ்ஸை என அழைக்கப்பட்டது. மொனராகலை என்ற பெயர் 1900இற்குப் பிற்பட்ட காலத்தில் தோற்றம் பெற்றதாகும் (சல்சபீல், 2001). வெல்லஸ்ஸை வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பிராந்தியமாக கருதப்படுவதோடு, கண்டி இராச்சியத்தின் (1469-1815) நிர்வாக அலகுகளில் ஒன்றாகவும் அமைந்திருந்தது (காதர், 1997). இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கவும், ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து பிறந்த மண்ணைக் காக்கவும் போராடிய கெப்பட்டிப்பொல, எகெலப்பொல, வீரபுரன் அப்பு,கொஹுகும்புரே ரட்டேரால, மொஹட்டால (சல்சபீல், 2001) போன்ற வீரர்கள் வாழ்ந்த பிரதேசமே வெல்லஸ்ஸையாகும். ஆரம்பகாலங்களில் இப்பிரதேசத்தில் ஒரு இலட்சம் ஏக்கர் நெல் வயல்கள் பயிர் செய்யப்பட்டன. இதனால் இப்பகுதியை சிங்களத்தில் 'வெல்லக்ஷ'என அழைத்தனர். வெல்லக்ஷ என்பது ஆயிரம் வயல்கள் என பொருள்படுகிறது. காலவோட்டத்தினால் வெல்லஸ்ஸ என இப்பெயர் திரிபடைந்து இன்றும் இதே பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. இப்பெயரின் பழைமைத்துவத்தை வெளிக்கொணரும் முகமாக பலர் பல நிறுவனங்களை வெல்லஸ்ஸ எனும் பெயரில் அமைத்துள்ளனர்.

பிரித்தானியர் (1796-1948) ஆட்சியின்போது தற்போதைய மொனராகலை நகரம் முப்பனைவெளி என்று அழைக்கப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் பஸ் நிலையமாகவும் தற்போது சந்தைத் தொகுதியாகவும் அமைந்துள்ள இந்நகரின் ஓரிடத்தில் அதிகளவு பனை மரங்கள் காணப்பட்டன. அவ்விடத்தில் அருகருகே மூன்று பனை மரங்கள் இருந்ததால் அவ்விடம் அதிக நிழல் தரும் இடமாகக் காணப்பட்டது. எனவே, இம்மர நிழல் பயணிகள் தங்கி ஓய்வெடுக்கும் இடமாக ஆயிற்று. மூன்று பனைகள் இருந்த இவ்விடத்தையே முப்பனைவெளி என அழைக்கலாயினர். இன்று வரை சிலரால் இப்பெயர் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கலாம். தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் இம்மாவட்டத்தில் சிங்களவர்களின் செல்வாக்கு அதிகரித்தது. எனினும் 2012ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின் படி இம்மாவட்டத்தில் 2.17% முஸ்லிம்கள் மாவட்டத்தின் சில பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, இவ்வாய்வு, இம்மாவட்டத்தில் அமைந்துள்ள முஸ்லிம் கிராமங்களின் தோற்றப் பின்னணி மற்றும் அவற்றில் முஸ்லிம்களின் பரம்பல் என்பவற்றைக் கண்டறிதல், அத்தோடு முஸ்லிம்களால் கைவிடப்பட்ட கிராமங்களை அடையாளப்படுத்தல் எனும் பிரதான இரு நோக்கங்களைக் கொண்டுள்ளது. இதற்காக கிராமவாசிகளிடம் பரவியிருந்தமரபுவழிக்கதைகள், கூற்றுக்கள் என்பன பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
அத்தோடு இம்மாவட்ட முஸ்லிம் கிராமங்களின் வரலாறு கண்டி, கிழக்கு, தென் மாகாணம் ஆகிய மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றோடு தொடர்புபட்டிருப்பதனால் அம்மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றாய்வு நூல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, ஆங்கிலேயர் காலத்தில் பிரசுரிக்கப்பட்ட சனக்கணக்கெடுப்பு அறிக்கைகள் மற்றும் நிருவாகப் பதிவேடுகள், பழைமைவாய்ந்த பள்ளிவாயல்கள், அடக்கஸ்தலங்கள், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால அன்றாட வீட்டுப் பாவனைப் பொருட்கள், காணி உறுதிகள் என்பவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2. முஸ்லிம் கிராமங்கள்
இலங்கையில் முஸ்லிம்கள் அனைத்து மாவட்டங்களிலும் பரந்து வாழ்கின்ற அதேவேளை, மொனராகலை மாவட்டத்திலும் சில கிராமங்களில் மிக நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 06 பிரிவுகளில் முஸ்லிம்கள் பிரதானமாக வாழ்கின்றனர். ஏனைய ஐந்திலும் விரல் விட்டு எண்ணக்கூடிய சில முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஐந்து கிராமங்கள் காணப்படுகின்றன. இன்னும் பல முஸ்லிம் குக்கிராமங்களும் காணப்படுகின்றன. பின்வரும் அட்டவணைகள் இம்மாவட்டத்தின் முஸ்லிம் கிராமங்கள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளில் தற்போதய முஸ்லிம் குடிசனப் பரம்பல் என்பவற்றைத் தெளிவுபடுத்துகின்றன.

முஸ்லிம் கிராமங்களின் பரம்பல் (மொனராகலை மாவட்டம்)
அட்டவணை 2.1

| இல. | தேர்தல் தொகுதி | பிரதேச செயலகப் பிரிவு | முஸ்லிம் கிராமங்கள் | முஸ்லிம் குக்கிராமங்கள் | முஸ்லிம்கள் வாழும் நகர்ப்புரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | பிபில | பிபில | கனுல்வெல | | பிபில |
| | | மெதகம | கொட்டபோவ (கொடிகமுவ) | 10ஆம் கட்டை | |
| | | | பகினிகஹவெல | | |
| | | | மெதகம | | |
| 02 | மொனராகல | மொனராகல | | கும்புக்கன | மொனராகல |
| | | படல்கும்புற | அளுப்பொத்த | | படல்கும்புற |
| 03 | வெல்லவாய | புத்தல | | | புத்தல |
| | | வெல்லவாய | | யாளபோவ | வெல்லவாய |
| | | | | மஹவெலமுள்ள | |
| | | | | ரன்தெனிய | |
| | | | | கம்பஹா | |
| | | | | நுகேயாய | |

ஆய்வுக்களத் தகவல்

முஸ்லிம் சனத்தொகைப் பரம்பல் - 2012 (மொனராகலை மாவட்டம்)
அட்டவணை 2.2

| இல. | பிரதேச செயலகப் பிரிவு | மொத்த சனத்தொகை | முஸ்லிம் சனத்தொகை |
|---|---|---|---|
| 01 | மடுள்ள (Madulla) | 31238 | 10 |
| 02 | பிபில (Bibile) | 40329 | 1020 |
| 03 | மெதகம (Medagama) | 35881 | 4939 |
| 04 | படல்கும்புர (Badalkumbura) | 40103 | 1814 |
| 05 | மொனராகல (Moneragala) | 49520 | 372 |
| 06 | சியம்பலாண்டுவ (Siyambalanduwa) | 54040 | 29 |
| 07 | புத்தல (Buttala) | 53084 | 468 |
| 08 | வெள்ளவாய (Wellawaya ) | 60060 | 1088 |
| 09 | தனமல்வில (Thanamalvila) | 26683 | 11 |
| 10 | செவனகல (Sevanagala) | 41900 | 03 |
| 11 | கதிர்காமம் (Kataragama) | 18220 | 55 |
| மொத்தம் | | 451058 (100%) | 9809 (2.17%) |

(தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2012)

2.1 முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்கள்

இத்தலைப்பில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஐந்து கிராமங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. பகினிகஹவெல, கொட்டபோவ, அலுப்பொத்த, மெதகம, கனுல்வெல என்பன இவ்வைந்து கிராமங்களுமாகும். பிபிலைத் தேர்தல் தொகுதியில் அதிகமான முஸ்லிம் கிராமங்கள் காணப்படும் அதே வேளை இத்தொகுதியில் அமைந்துள்ள மெதகம பிரதேச சபையில் பகினிகஹவெல, கொடபோவ, மெதகம எனும் மூன்று முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன. மாவட்டத்தில் கூடுதலான முஸ்லிம்கள் வாழ்வது இப்பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியிலாகும். இக்கிராமங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பின்வரும் தகவல்கள் முன்வைக்கப்படுகின்றன.

2.1.1 பகினிகஹவெலை(**Bakinigahawela**)

மொனராகலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் கிராமங்களுள் பகினிகஹவெலையும் ஒன்றாகும். இது மொனராகலை, பிபிலை ஆகிய இரு நகரங்களுக்கும் மத்தியில்B56பிரதான வீதியில் அமைந்துள்ளது. இவ்வீதியில் 11ஆம் மைற்கல் முதல் 13 ஆம் மைற்கல் வரையுள்ள நிலப்பரப்பில் பகினிகஹவெல அமைந்துள்ளது. இக்கிராமத்தின் எல்லைகளாக, வடக்கே மெதகம, தெற்கே மொறகஹமட, கிழக்கேபுப்பாற, மேற்கே பொல்கஹப்பிட்டிய ஆகிய கிராமங்கள் காணப்படுகின்றன. 11ஆம் கட்டை, அக்கறப்பனஹா, பிஹில்லகந்துர, வளவ்வத்த, அறாவ, தியம்பியகஸ்ஸாற, 13ஆம் கட்டை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக பகினிகஹவெல அமைந்துள்ளது.

பகினிகஹவெலைக் கிராமத்தின் ஒரு பகுதியான தற்போது ‘அக்கறபனஹா’ என அழைக்கப்படும் இடத்தில் வீதியின் ஒரு புறத்தில் வயல் வெளியும் மறு புறத்தில் சிறிய குளமொன்றும் இருந்துள்ளன. இக்குளத்திற்கு முன்னே இருந்த வயல் வெளியைச் சுற்றி பகினிகஹ என சிங்களத்தில் அழைக்கப்படும் வம்மி மரங்கள் பல இருந்தன. இவ்விடத்தில் நீர் வளமும் நிழலும் காணப்பட்டதால் தூர இடங்களுக்கு வர்த்தகப் பயணம் மேற்கொள்வோர் தங்கியிருந்து தமது களைப்பைப் போக்கிக் கொள்வர். எனவே,‘வம்மி மரங்களருகே காணப்பட்ட வயல்வெளி’ என்ற பொருளை உள்ளடக்கிய பகினிகஹவெல என்ற பெயரில் இக்கிராமம் அழைக்கப்படலாயிற்று (சல்சபீல், 2001). அக்காலத்தில் இங்கு பிரபல்யம் பெற்று வாழ்ந்த சில சிங்கள வாரிசுகள் தற்போதும் பகினிகஹவெல என்ற முதலெழுத்தைப் (மரபுவழிப் பெயர்) பெற்றிருப்பது இக்கூற்றை உறுதிப்படுத்தவல்ல சான்றாகும் (சல்சபீல், 2001).தற்போதும் பிரதான வீதியின் ஒரு புறம் அமைந்துள்ள வயல் வெளியைக் காணக்கூடியதாகவுள்ள அதேவேளை, மறு புறத்தில் காணப்பட்ட குளம் சனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாக குடியிருப்புப் பிரதேசமாக மாற்றம் அடைந்துள்ளது. ஆரம்பகாலத்தில் இக்கிராமத்தை தமிழ் பேசும் மக்கள் ‘பைனாவெளி’ (மேலது) என அழைத்தனர். ஆங்கிலேயர் இதனை

‘பகினிகஹவெல வீதிய’(அமீன், 2000) என அடையாளப்படுத்தினர். இன்றும் இப்பகுதி முதியவர்கள் பலரும் கிழக்கு மாகாணத்தில் சிலரும் இவ்வூரை பைனாவெளி என்று அழைக்கின்றனர். எனினும், இவர் பகினிகஹவெல என்ற பெயரிலேயே பிரபல்யம் பெற்றுள்ளது.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியிலிருந்து பகினிகஹவெலையில் மக்கள் வாழ்ந்து வந்ததாக பிரதேசவாசிகள் கூறுகின்றனர். துட்டகைமுனு மன்னன் ருஹுனு பிரதேசத்தை (கி.மு. 161 -137) ஆட்சி செய்த போது, அப்போது அநுராதபுரத்தை ஆண்டு கொண்டிருந்த எல்லாள மன்னனை வெற்றி கொள்வதற்கு வெல்லஸ்ஸை வழியாக தன் படையைச் செலுத்தினான் (கந்தையா, 1964). இப்பாதை பகினிகஹவெலையிலுள்ள‘உடகம்கொட’ வீதியை ஊடறுத்துச் சென்றதாகவும் இப்பாதையூடாக துட்டகைமுனு மன்னன் பிரயாணம் செய்ததாகவும் பகினிகஹவெலைப் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர். அத்தோடு மிக நீண்டகாலம் முஸ்லிம்கள் வாழ்ந்தமைக்கான வாய்மொழிச் சான்று ஒன்றும் உள்ளது. அதாவது “ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு பெரும் குடிசனமாக முஸ்லிம்கள் இங்கு வாழ்ந்து வந்த அதேவேளை, 1920களில் ஏற்பட்ட வாந்திபேதி நோய் காரணமாக அதிகமானோர் மரணமடைந்ததாகவும் எஞ்சியோரின் வழித்தோன்றல்களால் மீண்டும் இக்கிராமத்தில் மக்கள் பெருக்கம் ஏற்பட்டதாகவும் குறிப்பிடுவர்”(சல்சபீல், 2001). இத்தகவலின் படி பகினிகஹவெலையில் மத்திய காலம் தொட்டு முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது தெளிவாகின்றது. வர்த்தகத்தில் முஸ்லிம்கள் இக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தமையும் அப்பாதையூடாக போக்குவரத்து அதிகரித்துக் காணப்பட்டமையும் இதற்குக் காரணமாகும்.

இவ்வாறே, பகினிகஹவெலைக் கிராமத்தின் தொன்மையை எடுத்துக் காட்டும் முக்கிய சான்றுகளில் ஒன்றாக அங்கு அமைந்துள்ள பழைய ஜும்ஆப் பள்ளிவாயல் அமைந்துள்ளது. மொனராகலை மாவட்டத்தில் மிக நீண்டகால வரலாற்றையும், இன்றுவரை பாதுகாக்கப்பட்டதுமான பள்ளிவாயலாக இது காட்சியளிக்கின்றது. பகினிகஹவெலைக் கிராமத்தின் பூர்வீகத்தை நிரூபிக்கத் தகுதியான சான்று எனக்கருதப்படும் இப்பள்ளிவாயல் இன்றும் பாதுகாத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளிவாயல் சுமார் 600 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என பிரதேச முஸ்லிம்கள் கருதுகின்றனர். போர்த்துக்கேயர் காலப்பகுதியில் இப்பள்ளிவாயல் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதுவோர் சிலரும் உள்ளனர். மேலும் அக்காலத்தைப் பொறுத்த வரை வெல்லஸ்ஸையின் மிகப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயலாக இது திகழ்ந்துள்ளது. இப்பள்ளிவாயல் ஒரு விசித்திரமான அமைப்பில் கட்டப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். முதியவர்களின் கூற்றுப்படி இது கருங்கற்களைப் பயன்படுத்தி மண்ணினால் கட்டப்பட்டுள்ளது. அத்திவாரத்திலும் பூச்சு வேலையின் போதும், அக்காலத்தில் சீமெந்து கிடைக்காமையினால் சுண்ணாம்பு, தேன், முட்டை என்பவற்றை கலவையுடன் சேர்த்தனர். இக்கலவையின் உறுதித் தன்மைக்கு இதுவரை அழியாமல் காணக்கிடைக்கும் இப்பள்ளிவாயலின் கொங்கிரீட் அற்ற வில்மாட வடிவங்கள், வளைவுகளுடன் கூடிய புராதன கட்டடக்கலை சான்றாகும். இந்தியாவின் கட்டடக்கலை அமைப்பு இப்பள்ளிவாயலில் தென்படுவதைக் காணலாம். அத்தோடு ஒல்லாந்தர் (1656-1815) கால அன்றாட வீட்டுப் பாவனைப் பொருட்கள் சில இன்று வரை இப்பள்ளிவாயலில் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும். இப்பொருட்களில் ஒல்லாந்தரின் காலனித்துவ முத்திரை பதிக்கப்பட்டிருக்கின்றமை முஸ்லிம்கள் இக்கிரமத்தில் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தப் போதுமான சான்றாகும். இவ்வாறே இக்கிராம வாசிகள் சிலரது வீடுகளில் பிரித்தானியரின் காலனித்துவ முத்திரையிடப்பட்ட சில உணவுத் தட்டுகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாவட்டத்தின் வயது முதிர்ந்தவரான அப்துல் குத்தூஸ் லெவ்வை (1916-2008) என்பவர், கண்டி, அக்குறனையிலிருந்து பகினிகஹவெலைக்கு நான்கு பேர் வருகை தந்ததாகக் குறிப்பிடுகின்றார். (கண்டியிலுள்ள தற்போதைய உடதளவின்ன எனும் கிராமத்திலிருந்து வெல்லஸ்ஸைக் கிராமமான பகினிகஹவெலைக்கு முஸ்லிம்கள் குடியேறியதாகக் கூறும் மற்றொருவரின் கூற்றும் கவனிக்கத்தக்கது). இவர்களுள் சேகுமதார் என்பவரின் தந்தை வாப்புக் கண்டு மரைக்கார் என்பவரும் ஒருவராவார். இவர்களின் வருகைக்கு முன்னரும் இங்கு முஸ்லிம்கள் சமூகமாக வாழ்ந்து வந்தனர். இதனைக் கேள்வியுற்ற பின்னரே இவர்கள் இங்கு வருகை தந்து, பகினிஹவெலை மக்களுடன் கூடிவாழ ஆரம்பித்தனர். இங்கு வந்த இவர்கள் சிங்களவர்களிடம் சுமார் 360 ஏக்கர் நிலங்களைப் பெற்றனர். இந்நிலப்பரப்பில் மூன்று பகுதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. உடகங்கொட பங்குவ, மொறகஹமட பங்குவ,வளவ்வவத்த பங்குவ என்பவையே இவையாகும். இம்மூன்று பகுதிகளுக்கும் ரால் எனும் பிரபுக்கள் மூவர் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் முஸ்லிம்களாக இருந்ததோடு கண்டி இராச்சிய அரசாங்கத்திற்கும் மன்னனுக்கும் பல பாரிய உதவிகளை செய்து வந்தனர். இதனால் இப்பகுதிகள் இவர்களுக்கே வழங்கப்பட்டு விட்டன. பின்னர் இங்கு முஸ்லிம்கள் பரவலாகக் குடியமர ஆரம்பித்தனர். சேகு மதார், மீறா ஸாஹிபு அப்பா, வாப்புக் கண்டு மரிக்கார், மீறா ஸாஹிபு அப்துல்லாஹ் மத்திச்சம், பெரியதம்பி மத்திச்சம், அலீ உதுமான் மத்திச்சம் போன்றோர் 1800களில் சமூகத் தலைவர்களாக கடமையாற்றியவர்களாவர். கூர்ந்து அவதானிக்கையில் இந்நிகழ்வு கண்டி மன்னன் செனரத் (1604-1635) காலத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. இம்மன்னன் அக்காலப்பிரிவில் முஸ்லிம்களைப் பாதுகாத்து

முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுத்தவன். இந்தவகையில் இக்காலப்பரிவில் பகினிகஹவெலையிலும் முஸ்லிம்கள் குறியேறியதாக அனுமானிக்க இடமுள்ளது. இக்காலப்பிரிவிலிருந்து முஸ்லிம்கள் தம் குடியேற்றங்களை பரவலாக அமைத்துக் கொண்டுமுள்ளனர். 1901ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் போது 100 பேருக்குக் கூடுதலாக முஸ்லிம்கள் வாழ்ந்த கிராமங்கள் அடையாளங்காணப்பட்டன. இதில் பகினிகஹவெலையின் மொத்த சனத்தொகை 475ஆக இருக்கும் போது, முஸ்லிம்களின் எண்ணிக்கையும் 475 ஆகவே காணப்பட்டது (அமீன், 2000).எனவே இக்காலப்பிரிவில் முஸ்லிம்கள் தனிப்பெரும்பான்மையினராக இங்கு வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. இதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இங்கு சிங்களவர்களும் குறியேறியுள்ளனர். தற்போது இங்கு சுமார் 750 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற அதேவேளை, தற்போது சுமார் 100 சிங்களக் குடும்பங்களும் எல்லைப்புறங்களில் வாழ்ந்து வருகின்றன.

இக்கிராமத்தில் மக்களுக்குத் தேவையான பொது வசதிகள் முழுமையாகக் காணப்படாவிட்டாலும் அவ்வப்போது அவ்வசதிகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. கூட்டுறவுக்கடை 1940ஆம் ஆண்டும் உப தபாலகம் 1961ஆம் ஆண்டும் ஸ்தாபிக்கப்பட்டன (சல்சபீல், 2001). மின்சாரம் 1992ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. 1998ஆம் ஆண்டு தொலைபேசி வசதி, குடிநீர் வசதி என்பன வழங்கப்பட்டன. மத்திய மருந்தகம் (Central Dispensary) 1999ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இக்கிராமத்தின் பிரதான தொழிற்துறையாக வியாபாரம் விளங்குகின்றது. இதில் கால் நடை வியாபாரம் பிரதான இடம் வகிக்கின்றது. இத்துடன் தோட்டப் பயிர்ச்சி செய்கை, வேளாண்மை மிகக்குறைந்த அளவில் காணப்படுகின்றன. 1990களுக்கு முன் பெண்கள் வேலைவாய்ப்புக்காக வெளி நாடுகளுக்குச் செல்லும் பழக்கம் இருந்தது. ஆனால் இந்நிலை இன்று மாற்றமடைந்து 125இற்கும் அதிகமான ஆண்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர். இந்நிலை பகினிகஹவெலையின் பொருளாதார வளர்ச்சியில் பாரியளவு செல்வாக்குச் செலுத்தி வருவதனை அவதானிக்கலாம். அதே வேளை அரச தொழில் வாய்ப்புக்களும் பரந்தளவில் குறிப்பாக, ஆசிரிய நியமனங்களும் பங்கு வகிக்கின்றன.

### 2.1.2 கொட்டபோவை **(Kotabowa)**

மெதகமைப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அதிக முஸ்லிம்கள் வாழும் மற்றுமோர் கிராமம் கொட்டபோவையாகும். இதனை ஆங்கிலேயர் 'கொட்டபோவ வீதிய' என அழைத்தனர். சுமார் 400 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட இக்கிராமம் வடக்கே பந்தியாவையையும், கிழக்கே அழுத்வெலையையும், மேற்கே வாயதெனயையும், தெற்கே தகம்கமவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. பிபிலை - மொனராகலை பிரதான வீதியில் ஐவெலைச் சந்தியிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் உள்நோக்கியதாக இக்கிராமம் அமைந்துள்ளது. மெதகம நகரத்திலிருந்து இவ்வூருக்குச் செல்லும் மற்றொரு பாதையும் உண்டு. 1980களில் ஏற்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் மறுசீரமைப்பின்போது இக்கிராமம் கொட்டபோவ, கொடிகமுவ என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. தற்போது முஸ்லிம்கள் கொடிகமுவ கிராம சேவகர் பிரிவில் அதிகமாக காணப்படுகின்றனர். கொட்டபோவைப் பிரிவில் சிங்களவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர். பழைமையைப் பாதுகாக்கும் நோக்கில் இவ்வாய்வில் கொட்டபோவை எனும் பழம் பெயர் பயன்படுத்தப்பட்டு தகவல்கள் முன்வைக்கப்படுகின்றன.

கொட்டபோவ கிராமத்தின் தோற்றம் மற்றும் அதன் பெயருக்கான பின்னணி என்பவற்றை இப்பிராந்திய மக்கள் அறிந்து வைத்துள்ளனர். சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் கண்டியிலிருந்து ஒன்பது ஆண்கள் வெல்லஸ்ஸைக்கு வருகை தந்துள்ளனர். இவர்கள் பொதிமாடுகளுடன் வர்த்தகர்களாக,ஈச்சனாவத்தை, (யல்கும்புற) தொடங்கொல்ல ஆகிய கிராமங்களை வந்தடைந்தனர். இவ்விடங்கள் தண்ணீர் தேங்கி நிற்கும் சேற்று நிலங்களாக இருந்தபடியால் ஐவெலை எனும் பகுதி ஊடாக கொட்டபோவைக் கிராமத்தைச் சென்றடைந்தனர். இங்கு தமது பொதிமாடுகளை, தற்போதுள்ள பழையதபாற் கந்தோர் வளாகத்தில் கட்டி வைத்து விட்டு உணவு தயாரித்து உண்டு சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது கிழக்கு மாகாணத்திலிருந்து கண்டி நோக்கிச் செல்லும் ஐரோப்பிய வெள்ளைக்காரர்கள் குழுவொன்று இவர்களைச் சந்தித்தது. இக்குழு இம்முஸ்லிம்களிடம் தாம் தங்கியுள்ள இடத்திற்கு என்ன பெயர் எனக் கேட்டனர். அதற்கு இம்முஸ்லிம்கள், தமக்குப் பக்கத்தில் அரச மரக்குற்றி ஒன்று இருக்கக் கண்டு 'அரச மரக்குற்றி' எனும் பொருளைத் தரும் 'கொட்டபோ' (சிங்கள மொழிச் சொல்) என்ற பெயரைக் கூறினர். இதனை இந்த வெள்ளைக் காரக் கோஷ்டியினர் 'கொட்டபோவ' என தமது ஆவணங்களில் பதிந்து கொண்டனர். இதிலிருந்து இவ்வூர் இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வந்தது. மேற்படி சம்பவத்தை கொட்டபோவைக் கிராமவாசியான ஹசனார் முஹம்மது காசிம் என்பவர் தம் மூதாதையரிடமிருந்து பெற்றதாகக் குறிப்பிடுகின்றார். இச்சம்பவம் சுமார் 400 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றதாக குறிப்பிடப்படுவதனால் மேற்படி வெள்ளைக்காரக் குழுவினர் போர்த்துக்கேயராக இருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. அத்தோடு இக்காலப்

பிரிவில் இங்கு முஸ்லிம் குடியேற்றங்கள் உருவாகி இக்கிராமம் தோன்றியிருக்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது. இவ்வாறே இக்கிராமம் கண்டி-கிழக்கு வர்த்தகப் பாதையில் வர்த்தகர்கள் களைப்பாறுவதற்கு தங்கியிருந்த வேளை தோற்றம் பெற்றுள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது. ஏனெனில் மேற்படி கண்டி-கிழக்கு வர்த்தகத் தொடர்புகள் கொட்டபோவை ஊடாகவும் இடம்பெற்றதாக குறிப்பிடப்படுகின்றது (காதர், 1997). ஆகவே, இக்கிராமத்தில் ஒன்பது குடும்பங்களுடன் ஆரம்பமான முஸ்லிம் குடிசனம் பல வருடங்களின் பின்னர் 45 ஆக அதிகரித்தது (சல்சபீல், 2001). இன்று கொடிகமுவ, மடித்தாவ, கொட்டபோவகம, தெனிய, கொலனி, கொட்டபோவ வீதிய, சின்னக்கர, பகினிகஸ்பிட்டிய என்பவற்றை உள்ளடக்கிய இக்கிராமம் சுமார் 700 முஸ்லிம் குடும்பங்களையும் உள்ளடக்கி, மாவட்டத்தின் பெரும் கிராமங்களுள் ஒன்றாக திகழ்கின்றது.

கொட்டபோவைக் கிராமத்தின் வரலாற்றை உறுதிப்படுத்தும் மற்றொரு முக்கிய சான்றாக அங்கு அமைந்துள்ள பள்ளிவாயல் பற்றிய தகவல்கள் அமைந்துள்ளன. தற்போது கொட்டபோவையில் காணப்படக்கூடிய பழைய பள்ளிவாயல் 1895ஆம் ஆண்டு கட்டப்பட்டதாக கிராம வாசிகள் குறிப்பிடுகின்றனர். இக்கிராமத்திற்கு பல நூற்றாண்டு கால வரலாறு காணப்பட்டாலும் பிற்பட்ட காலத்திலேயே பள்ளிவாயல் அமைக்கப்பட்டுள்ளது. உழியினால் குடைந்து 'ஹவுழு' வடிவில் அமைக்கப்பட்டுள்ள பாராங் கல் ஒன்று இப்பள்ளிவாயலில் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும். இக்கல் பற்றிய வரலாற்றை கிராம வாசிகள் நன்கு

அறிந்து வைத்துள்ளனர். இது மல்கஸ்தலாவைப் (கைவிடப்பட்ட கிராமம்) பள்ளிவாயலில் ஹவுழாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அப்பள்ளிவாயலின் சிதைவுடன் கொட்டபோவைப் பழைய பள்ளிவாயலுக்கு யானை மூலம் கொண்டுவரப்பட்டதாகவும் கூறுகின்றனர். இது பண்டையகால மன்னர்களால் ஒரு பாத்திரமாகப் பயன்படுத்தப்பட்டதாகவும், மன்னர் ஆட்சி முற்றுப்பெற்றதும் இதனை முஸ்லிம்கள் மல்கஸ்தலாவை பள்ளிவாயலில் ஹவுழாகப் பயன்படுத்தியதாகவும், இது சுமார் 500 வருடங்களையும் கடந்த தொன்மையைக் கொண்டிருப்பதாகவும் இப்பிராந்திய முஸ்லிம்கள் குறிப்பிடுகின்றனர்.

இதே போன்று 1800ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட காணி உறுதிகள் இக்கிராம முஸ்லிம்களின் வரலாற்றுக்குச் சான்றாக அமைந்துள்ளன. ஏ.கே. காரியப்பர் என்பவரினால் வெல்லஸ்ஸையில் வைத்து எழுதப்பட்ட காணி உறுதிகள் பலதை இன்றும் முஸ்லிம்கள் தம் கைகளில் கொண்டுள்ளனர். இக்காலப் பிரிவில் பதுளை பிரசித்த நொத்தாரிசாக (Notary Public - Badulla) பதவி வகித்த ஏ.கே. காரியப்பர் என்பவர் எழுதிய, லாக்கடை முத்திரை குத்தப்பட்ட காணி உறுதிகள் களத்தில் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுள் ஒன்று 1875 பங்குனி மாதம் 02ஆம் திகதி காரியப்பர் நொத்தாரிசு அவர்களால் எழுதப்பட்டுள்ளது. மற்றொன்று 1905 வைகாசி மாதம் 04 ஆம் திகதி எழுதப்பட்டுள்ளது. இல. 137, பெறுமதி ரூபா. 200.00, பள்ளியாருக்கு கொடுக்கப்பட்ட ஒப்பினை என்று இதன் பின்புறத்தில் பதியப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் காணப்படக் கூடிய மற்றொரு கிராம சேவகர் பிரிவு கொடிகமுவையாகும். இப்பெயரின் தோற்றப் பின்னணியை பின்வருமாறு முன்வைப்பர். இப்பிரதேசத்தின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் நீரோடைகள் ஓடுகின்றன. இவ்வோடைகளுக்கு மறுகரையில் இக்கிராமம் அமைந்திருந்ததனால் சிங்கள மொழியில் அக்கரையர் எனும் பொருளில் 'கொடகம' என அழைத்தனர். பின்னர் அப்பெயர் திரிபடைந்து 'கொடிகமுவ' என வழங்கப்பட்டது (சல்சபீல், 2001).

1901ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின்போது 100 பேருக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் வாழும் கிராமங்கள் அடையாளம் காணப்பட்டன. பின்வரும் அட்டவணை இத்தொகை மதிப்பீட்டை வெளிப்படுத்துகின்றது.

அட்டவணை 2.3

| கிராமங்கள் | முஸ்லிம்களின் எண்ணிக்கை | மொத்த சனத்தொகை |
|---|---|---|
| கொட்டபோவ வீதிய | 161 | 185 |
| கொடிகமுவ | 369 | 372 |

(அமீன், 2000)

இக்கிராமத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும், குறிப்பாக, சம்மாந்துறை, இறக்காமம், அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களுக்குமிடையே மிக நீண்டகாலத் தொடர்பு நிலவி வருகின்றது. ஆரம்ப காலத்தில் கண்டி இராச்சியத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்குமிடையில் நிலவிய வர்த்தகத் தொடர்பு இதற்கு காரணமாக அமைந்துள்ளது. மேற்படி வர்த்தகப் பிராந்தியங்களுக்கிடையிலான போக்குவரத்துப் பாதையில் கொட்டபோவை அமைந்திருந்தது. கிழக்கு மாகாணத்தில் வாழும் சில உயர் பரம்பரையினரின் பூர்வீகம் கொட்டபோவையாகும். முன்னாள் அமைச்சர்களான ஏ.ஆர்.எம். மன்சூர், எம்.எம். முஸ்தபா ஆகியோரின் மாமனாரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஸி. அஹ்மத் அவர்களின் தாய் மாமனாருமான முன்னாள் அமைச்சர் கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பரினதும், சம்மாந்துறை, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் வசிக்கும் காரியப்பர்

குடும்பங்களினதும், முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் பாட்டனாரதும் பூர்வீகம் கொட்டபோவையாகும் (சல்சபீல், 2001). ஆகவேதான், இக்கிராமத்தில் வாழும் முஸ்லிம்கள், கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பண்பாட்டு மரபைக் கொண்டுள்ளனர். பழக்க வழக்கங்கள், பேச்சு வழக்குகள் என்பன சம்மாந்துறை, அக்கரைப்பற்று முஸ்லிம்களின் போக்கை ஒட்டியதாக அமைந்துள்ளன.

2.1.3 அலுப்பொத்தை

மொனராகலைத் தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள மற்றொரு பெரிய முஸ்லிம் கிராமம் அலுப்பொத்தையாகும். இது படல்கும்புற பிரதேச சபையில் அமைந்துள்ளது. மொனராகலை-பதுளை பிரதான வீதியில் (A22) படல்கும்புற நகரைத் தாண்டி சுமார் 4 கி.மீ. தூரத்தில் அலுப்பொத்தை சந்தி காணப்படுகின்றது. இதிலிருந்து 750 மீற்றர் உள்நோக்கியதாக இக்கிராமம் அமைந்துள்ளது. மேற்கே வறலந்த, கிழக்கே வாசிப்பென, தெற்கே கல்கஹுவாடிய, வடக்கே வன்கலந்தென்ன ஆகிய சிங்களக் கிராமங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளது. பப்பள, பங்களாமல, கடியன்தலாவ (ஜன்னத் புற), பனசாலாவ, ஓசீலாகிவுல, கொலனி, பீலிமலை ஆகிய சிறுசிறு பகுதிகளை உட்கொண்டதாக அலுப்பொத்தை அமைந்துள்ளது. அலுப்பொத்த என்பது ஒரு சிங்கள மொழிச் சொல்லாகும். ‘அலு’ என்பது சாம்பல், ‘பொத்த’என்பது புத்தகம் என்பதாகும். ஆகவே, எரிந்த புத்தகத்தின் சாம்பல் என்பது இதன் முழுப் பொருளாகும். பராக்கிரமபாகு (1153–1186) மன்னன் இவவூரை தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த போது, அவனது வாசஸ்தலத்தில் இருந்த ஏடுகள் பல தீப்பற்றிக் கொண்டன. இதனைத் தொடர்ந்து இவ்வூர் ‘அலுப்பொத்த என அழைக்கப்பட்டதாக பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.

வெல்லஸ்ஸையில் அலுப்பொத்தை மிகப் புராதன கிராமமாகும். இது பராக்கிரமபாகுவின் ஜன்மபூமி என அழைக்கப்பட்டது. இங்கு அதிக எண்ணிக்கையான முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். 1901 ஆம் ஆண்டு குடிசனமதிப்பீட்டின் படி, மொத்த சனத் தொகை 216 ஆகும். அதில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 183 ஆகும். 1815 இன் பின்னர் பதியப்பட்ட தரவுகளின் படி, சிங்களவர்களுடன் முஸ்லிம்களும் இப்பிரதேசத்தின் பல பகுதிகளிலும் வாழ்ந்துள்ளமை தொடர்பான குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன (நஜ்முதீன், 2002).

பண்டைய காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த காலப்பகுதிகளிலும் கண்டி இராச்சியத்திற்கும் தென்மாகாணத்திற்குமிடையில் வர்த்தகத் தொடர்புகள் காணப்பட்டதோடு போக்குவரத்துப் பாதைகள் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கியதாக வரலாறு குறிப்பிடுகின்றது (கந்தையா, 1964). இந்தவகையில் கண்டி-தென்மாகாண வர்த்தகப் பாதையில் தோற்றம் பெற்ற பழமை வாய்ந்த ஒரு கிராமம் அலுப்பொத்தையாகும். மொனராகலை மாவட்டத்தில் பெரும்பாலான முஸ்லிம் கிராமங்கள் உருவாவதற்கு இவ்வர்த்தகத் தொடர்புகள் காரணமாக அமைந்தன என்பது தெளிவு. இக்கிராமம் மன்னன் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் (1153–1186) அவனது கோட்டையாக விளங்கியதாகவும் வர்த்தகர்கள் போக்குவரத்தின் போது களைப்பாறும் பகுதியாக அமைந்திருந்ததாகவும் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர். இங்கு வாழும் அதிகமான முஸ்லிம்கள் தென்மாகாணத்தைத் தம் பூர்வீகமாகக் கொண்டோராவர். திக்வெல்லைப் பிராந்தியத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் இன்று வரை இங்கு வாழ்ந்து வருகின்றமை இதற்குச் சான்றாகும். இங்கு கண்டியிலிருந்து குடியேறிய சிலரும் உள்ளனர். அலுப்பொத்தை ஒரு தாய்க் கிராமமாக விளங்குகின்றது. ஏனெனில், அண்டியுள்ள படல்கும்புற, புத்தல போன்ற நகரங்கள் உருவாவதற்கு இவ்வூர் காரணமாக இருந்துள்ளது.

அலுப்பொத்தைக் கிராமத்தின் பழைமையை உறுதிப்படுத்துவதற்குள்ள முக்கிய சான்றுகளில் ஒன்றாக அங்கு அமைந்துள்ள ஸியாரம் விளங்குகிறது. இங்கு அடங்கப்பட்டுள்ள சேஹ் முஹம்மத் மாஹாத் வலியுல்லாஹ் என்பவர் இந்தோனேசியாவின் பத்தேவியாவிலிருந்து வருகை தந்ததாக பிரதேசவாசிகள் செவிவழியாக அறிந்து வைத்துள்ளனர். பகினிகஹவெலைக் கிராமத்திலும் இது போன்ற மற்றொரு ஸியாரமும் காணப்படுகின்றது. பகினிகஹவெலையில் அடங்கப்பட்டுள்ளவரின் மகன் அல்லது மருமகன் அல்லது இரத்த உறவுக்காரர் என பிரதேசிவாசிகளால் கருத்துச்சொல்லப்படுகிறது. இவர்கள் இருவரும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் போது இப்பிராந்தியத்திற்கு வருகை தந்ததாகக் குறிப்பிடுகின்றனர். அலுப்பொத்தையை ஊடறுத்துச் செல்லும் மடுகஸ்முல்ல சந்தியினால் கொட்டகொடிய சென்று, அங்கிருந்து கதிர்காமம் சென்றடையும் பாதையினால் (கண்டி-தென்மாகண வர்த்தகப் பாதை) இரண்டு வழிப்போக்கர்கள் (அல்லது வர்த்தகர்கள்) கண்டி நோக்கிச் சென்றுள்ளனர். இவ்விருவரும் அலுப்பொத்தையை அடைந்த போது, இருவரில் ஒருவரான சேஹ் முஹம்மத் மாஹாத் (மகன் அல்லது மருமகன்) சுகவீனமுற்று மரணித்து விடுகின்றார். இவரைக் குளிப்பாட்டுவதற்காக அவ்விடத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. இரண்டாமவரான சேஹ் சம்சுத்தீன் அவர்கள் (தந்தை அல்லது மாமா) தண்ணீர் தேடி சற்று தொலைவுக்குச் சென்ற போது, ஓரிடத்தில் பூமியிலிருந்து தண்ணீர் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது. இவவூற்று இன்றும் அலுப்பொத்தையில் காணப்படுகின்றது. இதனை முஸ்லிம்கள் ‘புபுல்’(நீரூற்று) என்று

சிங்களத்தில் அழைக்கின்றனர். இந்த ஊற்றின் மூலம் தண்ணீர் பெற்று காலம் சென்றவரைக் குளிப்பாட்டி அங்கு அடக்கம் செய்தார். அவ்விடத்தில் கல் அடையாளம் ஒன்றை வைத்து, அக்காலத்தில் அங்கு வாழ்ந்த முஸ்லிம்களிடம் விடயத்தைக் கூறிவிட்டு சேஹ் ஷம்சுத்தீன் என்பவர் பகினிகஹவெலை நோக்கி வருகை தந்தார். சில காலங்களுக்குப் பின்னர் சேஹ் ஷம்சுத்தீன் பகினிகஹவெலையில் காலமாகி அவர் அங்கு அடக்கம் செய்யப்பட்டார். இவருடைய ஸியாரம் பகினிகஹவெலை பழைய ஜும்ஆப் பள்ளிவாயல் முன்றலில் அமைந்துள்ளது. இவ்விரு ஸியாரங்களும் பகினிகஹவெலை, அலுப்பொத்தை ஆகிய கிராமங்களின் தொன்மையை விளக்குவனவாக அமைந்துள்ளன என்பது புரிந்துகொள்ளத்தக்கது.

அலுப்பொத்தைக் கிராமத்தைச் சூழ சிங்களவர்களும் தமிழர்களும் வாழ்கின்றனர். ஆரம்ப காலங்களில் பெருந்தொகையான முஸ்லிம்கள் இங்கு வாழ்ந்தனர். எனினும், ஆங்கிலேயர் காலத்தில் புதிய பாதைகள் அமைக்கப்பட்டு, அதனால் பல புதிய நகரங்கள் தோற்றம் பெற்றன. அப்போதெல்லாம் அலுப்பொத்தை மக்கள் போக்குவரத்துப் பிரச்சினையை எதிர் கொண்டு வந்தனர். இந்நிலை அவர்களை வேறு பிராந்தியங்களுக்குக் குடியேறத் தூண்டியது. இதன்படி பசறை, பதுளை, புத்தல, படல்கும்புற நகரங்களுக்கு இவ்வூர் முஸ்லிம்கள் இடம் பெயர்ந்தனர். இதனால், அலுப்பொத்தை முஸ்லிம்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. இன்று இப்பிரதேசத்தில் சுமார் 600 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்கின்றன.

அலுப்பொத்தை ஆங்கிலேயர் காலத்தில் பொருளாதார ரீதியாக மிகுந்த செல்வாக்குடன் விளங்கியது. பெரும்பாலானோர் வர்த்தகத்திலும், மற்றும் சிலர் அரச தொழிற்துறவுகளிலும் ஈடுபட்டனர். காலப்போக்கில் இந்நிலை மாற்றமடைந்து பொருளாதார நெருக்கடியை எதிர் கொள்ள நேர்ந்தது. குறிப்பிட்டுச் சொல்லும் அளவிலான நெற்காணிகள் இங்கு காணப்படுவதில்லை. நீர்ப்பாசன வசதிகளும் இங்கு செய்து தரப்படவில்லை. எனினும், கனிய வளங்கள் இங்கு கிடைக்கின்றன. பப்பள, கமேவெல கிராமங்களை அண்டியிருக்கும் அலுப்பொத்தையின் எல்லைப்புறத்தில் இரத்தினம் விளைகின்றது. கடந்த இரண்டு தசாப்த காலமாக முஸ்லிம்கள் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர். மிளகு, கொக்கோ, பாக்கு, பலா, கோப்பி, இறப்பர் என்பன இப்பிரசேத்தின் விசேட உற்பத்திகளாகும்.

### 2.1.4 மெதகம(**Medagama)**

பிபிலைத் தேர்தல் தொகுதியில், பிபிலை - மொனராகலை பிரதான வீதியில் (B56) மெதகம நகரம் அமைந்துள்ளது. மேற்கே கின்னரபோவ, கிழக்கே மொனரவான, தெற்கே அளங்முல்ல, வடக்கே 8ஆம் கட்டை ஆகிய பகுதிகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. 10ஆம் கட்டை எனும் முஸ்லிம் குக்கிராமத்தை உள்ளடக்கிய இந்நகரம், மெதகம பிரதேச செயலகப் பிரிவின் தலைக் கிராமமாக அமைந்துள்ளது. மெதகம என்பது சிங்கள மொழிச் சொல்லாகும். 'நடுவில் அல்லது மத்தியில் அமைந்துள்ள கிராமம்' என்பது இதன் பொருளாகும். பிரித்தானியர் ஆட்சியின் போது மெதகம ஒரு நகரமாக மாற்றமடைந்துள்ளது. அதாவது சுற்றிவளைத்திருந்த கிராமங்களான பகினிகஹவெல, கொட்டபோவ, மல்கஸ்தலாவ, கெந்தவின்ன, நன்னபுறாவ போன்றபகுதிகளிலிருந்து மக்கள் தமது வியாபாரத் தேவைகளுக்காகவும், அரச அலுவல்களுக்காகவும் இக்காலப் பிரிவில் மெதகம பகுதிக்கு வரவேண்டி ஏற்பட்டது. காலப் போக்கில் இது புவியியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்று ஒரு மத்திய பிராந்தியமாக மாற்றமடைந்தது. எனவே, இப்பகுதி மெதகம - நடு ஊர் என அழைக்கப்படலாயிற்று. இன்றும் இவவூர் நகரமாகத் திகழ்வதோடு சிங்களவர்களுக்குச் சமமாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுள் ஒன்றாக விளங்குகின்றது. மெதகமையில் வாழும் முஸ்லிம்களின் பூர்வீகம் மல்கஸ்தலாவையும் அலுப்பொத்தையுமாகும். அரச பதவிகளில் அங்கம் வகித்த பகினிகஹவெல, மல்கஸ்தலாவ, பொட்டபோவையைச் சேர்ந்த பலர் தம் கடமைக்காக மெதகமப் பகுதிக்கு வர வேண்டியிருந்தது. இவ்வாறு பல்வேறு தேவைகளுக்காக வருகை தந்த முஸ்லிம்கள் மெதகமையில் நிலங்களைக் கொள்வனவு செய்தனர். இதனால், தற்போது நகரமாக விளங்கும் இப்பகுதியில் 75% நிலப்பரப்பு முஸ்லிம்களுக்குச் சொந்தமானதாகவுள்ளது. தம் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வருகை தந்த முஸ்லிம்கள் காலப்போக்கில் குடியிருப்புக்களை அமைக்க ஆரம்பித்தனர். இதன்படி மல்கஸ்தலாவையிலிருந்து 03 குடும்பங்கள் வெளியேறி, மெதகமைக்கு உட்பட்ட 10ஆம் கட்டைப் பகுதியில் குடியேறின. இதனைத் தொடர்ந்து மேலும் 05 குடும்பங்கள் மெதகம நகரத்தில் குடியேறின. மலையாளத்து மௌலானா, முஹம்மது நானா என்போர் 10ஆம் கட்டையில் வாழ்ந்த முதியவர்களாவர். 1950களுக்குப் பிறகு 10ஆம் கட்டையிலும் மெதகமையிலும் முஸ்லிம் குடியிருப்புக்கள் அதிகரித்தன. சலீம் முதலாளி, குத்தூஸ் முதலாளி, தாசீன் நானா, இஸ்மையில் என்போர் மெதகம நகரில் வாழ்ந்த முதியவர்களாவர். தற்போது மெதகமைப் பகுதியில் சுமார் 300 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

மெதகமைப் பிரதேச முஸ்லிம்களின் பிரதான தொழிற்துறையாக வியாபாரம் விளங்குகின்றது. மெதகமை நகரமாக அமைந்திருக்கின்றமை இதற்கான காரணமாகும். பலர் நகரத்தில்

வியாபார ஸ்தலங்களை நிறுவியுள்ளனர். மற்றும் பலர் அங்காடி வியாபாரத்திலும், சிலர் இரத்தினக்கல் வியாபாரத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயத்தில் அல்லது உற்பத்தித்துறையில் ஈடுபடுவதற்கான பௌதீக வளம் இங்கு காணப்படுவதில்லை.

2.1.5 கனுல்வெல**(Kanulwela)**

பிபிலைத் தேர்தல் தொகுதியில் பிபில-மொனராகல பிரதான வீதியில்(B56)இக்கிராமம் அமைந்துள்ளது. பிபிலைப் பிரதேச சபையில் காணப்படக்கூடிய தனித்த ஒரு முஸ்லிம் கிராமம் இதுவாகும். வடக்கே பிபில, தெற்கே ஜவெல, மேற்கே யகுன்னாவ, கிழக்கே ஈச்சனாவத்த ஆகிய சிங்களக் கிராமங்கள் இதன் எல்லைகளாகும். ‘கனுல்வெல வீதிய’ என்று ஆங்கிலேயர் காலத்தில் இக்கிராமம் அழைக்கப்பட்டது. எனினும் கனுவெளியாய என்பதே இக்கிராமத்தின் ஆரம்பப் பெயராகும். பின்னர் சில காலம் ‘யாய’ என்பது விடப்பட்டு ‘கனுவெளி’ என அழைக்கப்பட்டது. சிங்கள மக்களுடன் முஸ்லிம்களின் தொடர்பு அதிகரித்ததனைத் தொடர்ந்து சிங்கள மொழி வடிவத்தில் இப்பெயர் கனுல்வெல’ என திரிபடைந்தது. கனுவெளி என்பதில் ‘கனு’ என்பது (சிங்களச் சொல்) வேலிக்கட்டை என்று பொருள்படுகின்றது. ‘வெளி’ என்பது (தமிழ்ச் சொல்) திறந்த வெளிக்குப் பயன்படுத்தப்பட்டது. ஆரம்ப காலத்தில் கனுல்வெலையில் குடியேறிய முஸ்லிம்கள் இங்கு பயிர்களை இட்டு அதனைப் பாதுகாக்க மரக் கட்டைகளை நெருக்கமாக நட்டி வேலிகளை அமைத்திருந்தனர். பெரும் நிலப்பரப்பில் இப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனவேதான், இவ்வூரைச் சென்று பார்த்த பலரும் கனுவெளி என அழைத்தனர். ‘யாய’ என்ற பெயர் விடப்பட்டதாயினும் இன்று கனுல்வெலையின் ஒரு பகுதி ‘யாய’ என அழைக்கப்படுகின்றது.

1910ஆம் ஆண்டு கனுல்வெலையில் முஸ்லிம் குடியிருப்புக்கள் ஆரம்பமானதாக பிரதேசவாசிகள் குறிப்பிடுகின்றனர். கொட்டபோவையிலிருந்து விவசாய நலன் கருதி கனுல்வெலையை அண்டியுள்ள பொறகொடைக்கு குடியேறிய முஸ்லிம்கள் பின்னர் கனுல்வெலைப் பகுதியிலும் குடியேறினர். கல்லோயா ஆறு கனுல்வெலைக் கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்றது. ஆற்றின் இக்கரையில் பொறகொடை அமைந்திருந்தது (பொறகொடை முஸ்லிம்களால் கைவிடப்பட்ட கிராமங்களுள் ஒன்றாகும்). ஆற்றின் மறு கரையில் வயல் நிலங்கள் அதிகமாகக் காணப்பட்டதோடு, முழுமையான நீர்ப்பாசன வசதியும் அமையப்பெற்றிருந்தது. அது மட்டுமல்லாது ஆங்கிலேயர் ஆட்சியின்போது வீதிகள் புனரமைக்கப்பட்டு துரித போக்குவரத்துத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. அதில் கனுல்வெலையூடாகச் செல்லும் வீதியும் திருத்தியமைக்கப்பட்டது. இத்தகைய நிலைகளை அவதானித்து அவற்றில் கவர்ச்சியுற்ற முஸ்லிம்கள் கனுல்வெலை நோக்கி நகர ஆரம்பித்தனர். பொறகாடையை முழுமையாகத் துறந்து கனுல்வெலையில் குடியேறி புதிய கிராமம் ஒன்றை அமைத்தனர். மற்றும் பலர் கொட்டபோவையிலிருந்தும் குடியேறினர். 1920களில் 10-15இற்கு இடைப்பட்ட குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வந்தன. 1941ஆம் ஆண்டு இது 30 குடும்பங்களாக அதிகரித்தது. முஸ்லிம்கள் 65 ஏக்கர் நிலத்தைப் பெற்று காடகற்றி சேனைப் பயிர்ச் செய்கை செய்தனர். ஒரு சேனைக்கு ரூபா 10 குத்தகைப்பணம் செலுத்த வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக சேனை செய்து வந்த முஸ்லிம்கள் இங்கேயே குடியிருந்தனர். பின்னர் அப்போதிருந்த ஆராச்சி (கிராம சேவகர்) வழக்குத் தாக்கல் செய்து இக்காணிகளுக்கு உறுதிகளை பெற்றுக் கொடுத்தார்.

கனுல்வெலையில் 1927ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழைமை வாய்ந்த பள்ளிவாயல் ஒன்று அமைந்திருந்தது. அண்மைக் கிராமமான பொறகொடைப் பள்ளிவாயலை உடைத்து அதிலிருந்து பெற்ற கட்டுமானப் பொருட்களோடு இன்னும் பொருட்கள் சேர்த்து மடிகே விதானையின் தந்தை உமர் மத்திச்சம் என்பவரும் அவரது சகாக்களும் இணைந்து கனுல்வெலை எல்லைக்குட்பட்ட வகையில் ஆற்றின் மறுகரையில் இப்பள்ளிவாயலை அமைத்தனர். பள்ளிவாயலுக்கு மரம் ஏற்றி வரும் போது அறுபுப் பாடல்களை (பைத்) பாடி வந்ததாகவும் உருண்டை மண்வைத்து வரிச்சுச் சுவரினால் இப்பள்ளிவாயல் அமைக்கப்பட்டதாகவும் பிரதேசவாசிகள் குறிப்பிடுகின்றனர். தற்போது இப்பள்ளிவாயல் உடைக்கப்பட்டு அவ்விடத்தில் புதிய பள்ளிவாயல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிவாயல் இடிக்கப்பட்டமை முஸ்லிம் பூர்வீகம் மற்றும் பாரம்பரியம் என்பவற்றை கேள்விக்குறியாக்கும் செயற்பாடு என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

தற்போது கனுல்வெலையில் சுமார் 350 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இங்கு அதிகமானோர் விவசாயத்தைத் தம் தொழிலாகக் கொண்டுள்ளனர். ஒரு வருடத்தில் இரண்டு போகங்கள் வேளாண்மைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். மற்றொரு இயற்கை வளமான இரத்தினம் இங்கு கிடைக்கின்றது. இரத்தினக் கல் அகழ்விலும் வியாபாரத்திலும் ஈடுபடுவோர் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றனர். மற்றும் சிலர் கால்நடை வியாபாரத்திலும் ஈடுபடுகின்றனர். பிபிலை நகர் அண்டியுள்ளதால் அங்கு சென்று வியாபாரத்தில் ஈடுபட்டு பொருளீட்டும் பலரும் கனுல்வெலையில் உள்ளனர்.

3. முஸ்லிம் குக்கிராமங்கள்

மொனராகலை மாவட்டத்தில் பிபில, மொனராகல, புத்தள,வெல்லவாய, படல்கும்புற, கும்புக்கன எனும் பகுதிகளில் முஸ்லிம்கள் சொற்பமாக வாழ்ந்து வருகின்றனர். இவற்றில் கும்புக்கன தவிர்ந்த ஏனைய பகுதிகள் நகர்ப்புரங்களாகும். இப்பகுதிகளில் பெரும்பான்மையினத்தவரின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. பெரும்பாலும் இப்பிராந்தியங்களில் முஸ்லிம்கள் வியாபார நோக்கத்திற்காகத் தங்கியுள்ளனர். பிபிலை நகரத்தில் சொற்பளவு முஸ்லிம்கள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இங்கு மிகக்குறைந்தளவில் வியாபார ஸ்தலங்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமாகவுள்ளன. மொனராகலை, வெல்லவாய நகரங்களில் குறிப்பிடத்தக்களவு வியாபார ஸ்தளங்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமாகவுள்ளன. நகர்ப்பகுதிகளிலும் சில குக்கிராமங்களிலும் முஸ்லிம்களின் பரம்பல் எவ்வாறு காணப்படுகின்றது என்பது பற்றி பின்வருமாறு விரிவாக ஆராயலாம்.

மொனராகலை மாவட்டத்தின் மூன்று தேர்தல் தொகுதிகளில் ஒன்றான பிபிலை, ஒரு நகரமாக விளங்குகின்றது. இப்பகுதியை ஒரு முஸ்லிம் கிராமமாகக் கொள்ள முடியாது. ஏனெனில், இங்கு குறிப்பிடத்தக்க முஸ்லிம் குடியிருப்புக்கள் காணப்படுவதில்லை. எனினும், கிடைக்கப்பெற்ற தகவலின் படி ஆங்கிலேயர் காலம் முதல் இன்று வரை முஸ்லிம்கள் வியாபாரத்தில் ஈடுபடும் நகரமாக பிபிலை திகழ்கின்றது. ஆங்கிலேயர் காலத்தில் நிருவாக ரீதியாக பிபிலை முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்டது. அக்காலங்களில் முஸ்லிம்கள் தமது அரச நிர்வாக அலுவல்களை நிறைவேற்றிக் கொள்ள பிபிலைக்குச் சென்று வருவர். கண்டி-கிழக்கு வர்த்தகப் பாதையில் பிபிலை அமைந்திருந்ததால் வர்த்தக ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இங்கு சிங்களவர்களின் செல்வாக்கு அதிகரித்து, முஸ்லிம்களின் ஆதிக்கம் குறைய ஆரம்பித்தது. தற்போது அண்டிய கிராமங்களான கனுல்வெல, கொட்டபோவ, மெதகம மற்றும் காத்தான்குடி பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் வாடகைக்கு கட்டிடங்களைப் பெற்று வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மற்றொரு நகரமான மொனராகலையில் சுமார் 25% நிலப்பரப்பு முஸ்லிம்களுக்குச் சொந்தமாகவுள்ளது. இங்கு முஸ்லிம்கள் வியாபாரத்துக்காகத் தங்கியிருக்கின்றனர். ஆரம்ப காலங்களில் முஸ்லிம்களும் தமிழர்களும் அதிகமாக வாழ்ந்தனர். சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் பெரும்பான்மையினத்தவரின் செல்வாக்கு அதிகரித்தது. ஒல்லாந்தர் காலம் முதல் மொனராகலை நகர்ப்பகுதி வர்த்தக ரீதியாக முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்டது. அதாவது கண்டி–தென் மாகாண வர்த்தகப் பாதையில் இந்நகரம் அமைந்திருந்தமை இதற்கான காரணமாகும். போக்குவரத்தின்போது தங்கியிருந்து ஓய்வெடுத்துச் செல்லும் ஓர் மத்திய தளமாக இப்பகுதி விளங்கி வந்தது. இன்று இது இம்மாவட்டத்தின் தலைநகராக விளங்குவதோடு கிழக்கு–தென், அதே போன்று கண்டி–கிழக்கு மாகாணங்களின் போக்குவரத்துப் பாதையில் அமைந்துள்ளது.

மொனராகலைப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கும்புக்கன முஸ்லிம்கள் வாழும் ஒரு குக்கிராமமாகும். இங்கு தமிழர்களும் சிங்களவர்களும் பெரும்பான்மையாக வாழும் அதே வேளை முஸ்லிம்கள் சொற்பமாக வாழ்ந்து வருகின்றனர். கும்புக்கன வரலாற்றில் பெயர் பெற்ற ஒரு கிராமமாகும். இப்பிராந்தியத்தை கும்புக்கன் ஓயா ஊடறுத்துச் செல்வதன் காரணமாக இவ்வூருக்கு இப்பெயர் வைக்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் நதிக் கரைகளை மையங்களாகக் கொண்டு மனித நாகரிகம் கட்டியெழுப்பப்பட்டது. இந்த வகையில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலந்தொட்டு இங்கு மக்கள் குடியேறி வாழ்ந்துள்ளனர். (கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 2006) எனினும் முஸ்லிம்கள் 1940களுக்குப் பிற்பட்ட காலத்தில் இங்கு குடியியேறியுள்ளனர். இதன்படி ஆரம்பமாக நான்கு முஸ்லிம் குடும்பங்கள் வந்து குடியேறியுள்ளன. இனறு 40 குடும்பங்கள் வரை வாழ்ந்து வருகின்றன. பிரதான வீதியிலிருந்து உள்நோக்கி சுமார் 750 மீற்றர் தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது. கும்புக்கனை மற்றும் மொனராகலை ஆகிய பிரதேசங்களில் வாழும் மொத்த முஸ்லிம் குடியிருப்புக்கள் 372 ஆகும் (தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2012).

படல்கும்புற, மொனராகலைத் தேர்தல் தொகுதியில் மொனராகலை-பதுளை பிரதான வீதியில்(A22)அமைந்துள்ள ஒரு குருநகரமாகும். அலுப்பொத்தையிலிருந்து இங்கு முஸ்லிம்கள் குடியேறினர். போர்த்துக்கேய, ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் கண்டி-தென் மாகாண வர்த்தகப் பாதையில் அலுப்பொத்தைக் கிராமமும் அமைந்திருந்தது. ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தி செல்வாக்குப் பெற்றிருந்தது. இவ்வுற்பத்தித் துறையை வளர்த்தெடுப்பதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் ஆங்கிலேயர்களால் அபிவிருத்தி செய்யப்பட்டன. இதன் படி பதுளை-மொனராகலை வீதியும் துரித அபிவிருத்திக்கு உட்படுத்தப்பட்டது. இவ்வீதி புனர்நிர்மாணம் செய்யப்பட்டதன் பின்னர் படல்கும்புற பிரதேசமும் புவியியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்றது. இதன் பின்னர் அலுப்பொத்தையில் வாழ்ந்த முஸ்லிம்கள் சிலர் இங்கு குடியேறினர். 1940களுக்குப் பின் இது ஒரு நகரமாக மாற்றமடைந்தது. அலுப்பொத்தைக் கிராமத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் தற்போதைய படல்கும்புற நகர்ப் பகுதியிலும் ஆரம்ப

காலங்களில் நிலங்களைச் சொந்தமாக்கி வைத்திருந்தனர். பிரதான வீதி அமைக்கப்பட்டதும் வியாபார நோக்கத்திற்காக பலர் 1940களில் படல்கும்புற வந்தனர். இவ்வாறு ஏற்பட்ட சனப்பெருக்கம் இதனை ஒரு நகர்ப்புறமாக மாற்றியது. நகரத்தில் 75% வியாபார ஸ்தலங்கள், காணிகள் என்பன முஸ்லிம்களுக்குச் சொந்தமாகவுள்ளன. எனினும் அண்மைக்காலமாக பெரும்பான்மையினத்தவருக்கு இவை விற்கப்பட்டு வருகின்றன. படல்கும்புற முஸ்லிம்கள் மொத்தமாக அலுப்பொத்தையிலிருந்து குடிபெயர்ந்தவர்களாவர். ஆரம்பத்தில் அலுப்பொத்தையிலும் பின்னர் படல்கும்புறவிலும் இதனைத் தொடர்ந்து இலுக்குமுள்ளையிலும் முஸ்லிம்களின் பரம்பல் ஏற்பட்டது. இலுக்குமுள்ளை என்பது படல்கும்புறவில் அமைந்துள்ள ஒரு குக்கிராமமாகும். இதனை சேனை என்றும் அழைப்பர். இங்கு ஆரம்பத்தில் காணிகளைப் பிடித்து சேனை செய்தனர். சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் இலுக்குமுள்ளையில் முஸ்லிம்கள் குடியேறினர். இன்று படல்கும்புறவில் முஸ்லிம்கள் சொற்பமாக, சுமார் 100 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

வெள்ளவாய தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள மற்றொரு குருநகரம் புத்தளையாகும். இது வெள்ளவாய மற்றும் மொனராகலை நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. இது பெரும்பான்மைச் சிங்களவர்களைக் கொண்ட ஒரு நகராயினும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களும் கணிசமாகக் காணப்படுகின்றன. புத்தளை வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் பெற்ற ஒரு பிரதேசமாகும். துட்டகைமுனு மன்னன் அனுராதபுரத்தை ஆட்சி புரியும் போது புத்தளையூடாக தென் மாகாணம் சென்றதாக வரலாறு குறிப்பிடுகின்றது (கந்தையா, 1964). எனவே பண்டையக் காலம் தொட்டு மக்கள் வாழ்ந்த ஒரு பகுதியாக இது விளங்குகின்றது. தற்போது நகரத்தில் பெரும்பான்மைச் சிங்களவர்கள் குடியிருந்தாலும் சுற்றியுள்ள 11ஆம் கட்டை, கொலனி பகுதிகளில் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இப்பகுதியில் 468 (தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2012) முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான நகரங்களுள் ஒன்றாக வெல்லவாய விளங்குகிறது. இங்கு குடியிருப்புக்கள் குறைவாகவும் வர்த்தக நிலையங்கள் அதிகமாகவும் காணப்படுகின்றன. தென், சபரகமுவ மாகாணங்களின் பிரதான போக்குவரத்துப் பாதையில், வெள்ளவாய அமைந்துள்ளதால் புவியியல் ரீதியாக இது முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. பொதுவாக இங்கு 1900களில் குடியேற்றங்கள் ஆரம்பமாகியுள்ளன. மத்திய காலப்பகுதியில் இடம்பெற்ற கண்டி இராச்சியத்திற்கம் தென் மாகாணத்திற்குமிடையிலான வர்த்தகப் பாதையில் இந்நகரம் அமைந்துள்ளதனால் ஆரம்ப காலங்களில் வியாபாரத்துக்காக வருகை தந்த முஸ்லிம்கள் இங்கு சிறிது சிறிதாக குடியமர ஆரம்பித்தனர். தெவுந்தர, திக்வெல்லை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலிருந்து வெள்ளவாயவுக்கு முஸ்லிம்கள் ஆரம்பமாக வருகை தந்தனர். 1929களில் இங்கு சுமார் 30 குடும்பங்கள் மாத்திரம் வாழ்ந்து வந்தன. வியாபார ரீதியாக இந்நகரம் முக்கியத்துவம் பெற்றதனை உணர்ந்த பகினிகஹவெலை, கொட்டபோவைப் பகுதி முஸ்லிம்கள் சிலரும் 1945களில் அங்கு குடியேறினர். இன்று வெள்ளவாய நகர்ப்பகுதியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான சுமார் 50 வியாபார ஸ்தளங்கள் காணப்படுவதோடு சுமார் 75 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களுள் தென்மாகாணத்தைச் சேர்ந்தோரும் உள். அத்தோடு, வெள்ளவாயவைச் சூழவுள்ள யாளபோவை, மஹவெலமுள்ளை, றன்தெனிய, கம்பஹா, நுகேயாய ஆகிய ஐந்து குக்கிராமங்களிலும் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்றனர். இக்கிராமங்களில் சுமார் 350 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அனைத்து கிராமங்களுக்குமாக ஒரு ஜு ம்ஆப் பள்ளிவாயல் காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு அறிக்கையின் படி வெள்ளவாயப் பிரதேசத்தின் மொத்த முஸ்லிம் சனத்தொகை 1088 ஆகும். முக்கிய கிராமங்களுள் ஒன்றான யாளபோவை 1981ஆம் ஆண்டு அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜே.எம். குமாரதாசவின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. இங்கு நிர்மாணிக்கப்பட்ட 60 வீடுகளில் 30 வீடுகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டன (சல்சபீல், 2001). தற்போது இங்கு சுமார் 135 முஸ்லிம் குடும்பங்கள் வசிக்கின்றன. இவ்வாறே மஹவெலமுல்லைக் கிராமமும் 1978ஆம் ஆண்டு ஒரு சில நலன்விரும்பிகளின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. இங்கு தற்பொழுது சுமார் 90 முஸ்லிம் குடும்பங்கள் வசிப்பதுடன் கல்வி மேம்பாட்டிற்காக முஸ்லிம் பாடசாலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர றந்தெனியக் கிமைத்தில் சுமார் 20 முஸ்லிம் குடும்பங்களும் கம்பஹாவில் 15 குடும்பங்களும் நுகேயாயவில் 15 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன. றந்தெனிய, கம்பஹா, நுகேயாய ஆகியவை இப்பிரதேசத்தின் பழமைவாய்ந்த கிராமங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

4. கைவிடப்பட்ட கிராமங்கள்

மொனராகலை மாவட்டத்தில் பழைமை வாய்ந்த கிராமங்களுள் மல்கஸ்தலாவை, பொறகொடை ஆகிய இரண்டும் பிரதானமானவையாகும். விசேடமாக மல்கஸ்தலாவையில் முஸ்லிம்களின் வரலாறு மிகப் பழைமையானதாகும். முஸ்லிம்கள் இவ்விரண்டு கிராமங்களிலும் தனித்துவம் பேணி வாழ்ந்து வந்துள்ளனர். எனினும், பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இவ்விரு கிராமங்களிலிருந்தும் இடம்பெயர்ந்துள்ளனர். தற்போது இவற்றில்

முஸ்லிம் குடியிருப்புக்கள் காணப்படுவதில்லை. அத்தோடு இவ்விரு கிராமங்களுடனான தொடர்புகளும் முழுமையாக அறுந்து போயுள்ளன. இக்கிராமங்கள் பற்றிய தகவல்களை பின்வருமாறு விரிவாக ஆராயலாம்.

4.1 மல்கஸ்தலாவை**(Malgastalawe)**

மல்கஸ்தலாவை மொனராகலை மாவட்ட முஸ்லிம்களால் கைவிடப்பட்ட கிராமங்களுள் ஒன்றாகும். இது 'மல்கஸ்தலாவே வீதிய' என ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்டது (அமீன்,2000). வெல்லஸ்ஸைப் பிரதேசவாசிகள் இம்மாவட்டத்தின் முஸ்லிம் தாய்க் கிராமம் இதுவாகும் எனக் கூறுகின்றனர். 1970ஆம் ஆண்டு வரையிலும் முஸ்லிம்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். ஆங்கிலேயர் காலத்தில் இக்கிராமம் பெரும் பெயர் பெற்று விளங்கியது. இவ்வூர் மெதகம நகரத்திலிருந்து மீகஹப்பிட்டிய நோக்கிச் செல்லும் வீதியில் 'திம்பிரி' எனும் கிராமத்தை அண்டியதாக அமைந்திருந்தது. இக்கிராமத்திற்குச் செல்வதற்கு இரண்டு வீதிகள் இருந்தன. ஒன்று, கொட்டபோவ வீதியினால் திம்பிரி' எனும் கிராமத்துக்குச் செல்லும் பாதை மற்றையது, மேற்குறிப்பிட்டதுபோல மீகஹபிடிய வீதியினால் திம்பிரிய நோக்கிச் செல்லும் பாதை் இவ்விரண்டு பாதைகளையும் முஸ்லிம்கள் பயன்படுத்தியுள்ளனர்.

17ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் கோட்டை இராச்சியத்திலிருந்து போர்த்துக்கேயரால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அப்போதைய கண்டி மன்னன் செனரத்திடம் புகலிடம் தேடி வந்தனர். கண்டிய அரசன் இவர்களில் ஒரு பகுதியினரை வெல்லஸ்ஸையில் குடியமர்த்தினான் (மெனலானா,1997). இக்குடிகள் கொட்டபோவை என்ற கிராமத்திலும் மல்கஸ்தலாவை என்ற கிராமத்திலும் தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். இவர்களையே இம்மாவட்டத்தின் ஆரம்பக் குடிகள் என பிரதேசவாசிகள் அடையாளப்படுத்துகின்றனர்.

மல்கஸ்தலாவையில் முஸ்லிம்கள் சுமார் 4 நூற்றாண்டுகள் வாழ்ந்துள்ளனர். மிகுந்த செல்வாக்குடன் காணப்பட்ட இவர்கள் அறிவுத் துறையில் வளர்ச்சியடைந்திருந்ததனால் அரச பதவிகளையும் வகித்துள்ளனர். சேனை செய்வதை இப்பகுதி மக்கள் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். எனினும், காட்டு யானைகளின் தொல்லைகளினால் தமது பயிரைக் காக்க பெரிதும் சிரமப்பட்டுள்ளனர். 1925ஆம் ஆண்டு தொடக்கம் இக்கிராமத்திலிருந்து முஸ்லிம்கள் இடம்பெயர ஆரம்பித்தனர். இவர்கள் இடம் பெயர்ந்தமைக்கான பிரதான காரணிகளைப் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

- யானைத் தொல்லை காரணமாக பயிர்ச் செய்கையில் வெற்றி காண முடியாமல் போனமையும் உயிர் ஆபத்து ஏற்படும் என்கின்ற அச்சமும்
- வெளிப் பிராந்தியங்களில் தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தமை
- ஆங்கிலேயர்கள் காலத்தில் மெதகமை, பகினிகஹவெலை போன்ற கிராமங்கள் புவியியல் ரீதியாக செல்வாக்கு பெற்றமையினால் இவ்வளர்ச்சி அடைந்த பிரதேசங்களில் குடியமர ஆவல் கொண்டமை
- மல்கஸ்தலாவை காட்டுப் பிரதேசமாகக் காணப்பட்டதால், போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்நோக்கியமை
- மல்கஸ்தலாவையைச் சுற்றியிருந்த கிராமங்கள் யாவும் சிங்களப் பகுதிகளாக அமைந்திருந்தமை

1901ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின் படி 'மல்கஸ்தலாவே வீதிய' எனும் பகுதியில் வசித்த மொத்த குடிமக்கள் 110 ஆகும். அதில் 107 பேர் முஸ்லிம்களாவர். (அமீன், 2000). இவ்வூரிலிருந்து வெளியேறிய முஸ்லிம்கள் அதிகமானோர், மெதகமை - 10ஆம் கட்டை எனுமிடத்திலும் பகினிகஹவெலையிலும் குடியமர்ந்தனர். 1970களில் மல்கஸ்தலாவையில் முஸ்லிம் குடியிருப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. 'கொட்டமுள்ளை' எனும் பெயரில் மல்கஸ்தலாவையை அண்டியதாக மற்றொரு முஸ்லிம் குக்கிராமமும் இருந்தது. இதில் சுமார் 10 குடும்பங்கள் வசித்து வந்தன. இவர்கள் தம் அன்றாட நடவடிக்கைகளில் மல்கஸ்தலாவை முஸ்லிம்களுடன் இணைந்து செயற்பட்டனர். பின்னர் கொட்டமுள்ளைக் கிராமத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் கொட்டபோவைக்கு இடம்பெயர்ந்தனர். கொட்டமுள்ளையார் எனும் ஒருவரும் அவரது குடும்பத்தினர்களும் தற்போது கொட்டபோவைக் கிராமத்தில் வசித்து வருகின்றமை இதற்குச் சான்றாகும். இவ்வாறே, முஹம்மது யாசீன் மரைக்கார் என்பவர் 1965களில் பல்கஸ்தலாவையிலிருந்து கொட்டபோவைக்கு இடம் பெயர்ந்தவர்களுள் ஒருவராவார். 'மல்கஸ்தலாவை பெத்தா' எனும் வயோதிபப் பெண், அப்துல் ஹமீது லெவ்வை (மண்டுக்கொட்ட அப்பா) என்போர் மல்கஸ்தலாவையில் பிறந்து, வாழ்ந்து பகினிகஹவெலைக்கு இடம் பெயர்ந்து அண்மையில் காலமானவர்களாவர். 'மல்கஸ்தலாவை ஆச்சி' என்ற வயோதிபப் பெண் மெதகமை, 10ஆம் கட்டைக்கு இடம் பெயர்ந்து 103 வயதில் அண்மையில் காலமானார். இவ்வாறு மல்கஸ்தலாவையில் வாழ்ந்த முஸ்லிம்கள் மேற்குறிப்பிட்ட நான்கு கிராமங்களுக்கும் குடியேறியுள்ளனர். எனினும், அதிகமானோர் பகினிகஹவெலையில் குடியேறினர்.

மல்கஸ்தலாவையில் ஜும்ஆப் பள்ளிவாயல் ஒன்றும் அமைந்திருந்தது. இது மிகப்பழைமை வாய்ந்ததாகும். இது எப்போது கட்டப்பட்டது என்பது பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. இப்பள்ளிவாயலில் காணப்பட்ட அங்கசுத்தி (வுழு) செய்வதற்கான நீர்த்தடாகம(ஹவுழ்) பெரும் பாராங்கல் ஒன்றினால் ஆக்கப்பட்டிருந்தது. அதாவது, இப்பாராங்கல்லின் நடுப்பகுதி அகழ்வு செய்யப்பட்டு அது 'ஹவுழ்' ஆக மாற்றப்பட்டுள்ளது. இது இப்பள்ளிவாயலின் பழைமைத்துவத்தை வெளிக்கொணர்கின்றது. மல்கஸ்தலாவையிலிருந்து முஸ்லிம்கள் இடம் பெயர்ந்ததனைத் தொடர்ந்து இங்கு காணப்பட்ட பள்ளிவாயலும் இடிந்து வீழ்ந்தது. இதனைப் பராமரிக்க யாரும் இல்லாது போனமை இதன் சிதைவுக்குக் காரணமாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து இங்கு காணப்பட்ட ஹவுழ் கல் கொட்டபோவை ஜும்ஆப் பள்ளிவாயலுக்கு எடுத்து வரப்பட்டது. இதனை யானை மூலம் இடம் மாற்றியதாக கிராமவாசிகள் கூறுகின்றனர்.

அக்காலப் பிரிவில் முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் நல்லுறவைப் பேணி வந்தனர். தற்போது இப்பகுதியில் வாழ்வோர் கஹட்டியங்வெல எனும் கிராமத்துச் சிங்களவர்களாகும். முஸ்லிம்களின் நிலங்கள், பள்ளிவாயல் தடம் என்பன இன்றும் இங்கு தென்படக் கூடியதாகவுள்ளன. தற்காலத்தில் முஸ்லிம்கள் அங்கு செல்வதைத் தவிர்த்து முற்றுமுழுதாக இக்கிராமத்தை கைவிட்டு விட்டனர். தற்போதைய இளம் சந்ததியினர் தம் மூதாதையரின் பழங்கால வாழ்விடம் பற்றி அறியாதிருக்கின்றமை துரதிஷ்டவசமாகும்.

4.2. பொறகொட (**Boragoda)**

முஸ்லிம்களால் கைவிடப்பட்ட கிராமங்களுள் பொறகொடையும் ஒன்றாகும். இது பிபிலை பிரதான வீதியில் (B56) கனுல்வெல, ஐவெல ஆகிய இரண்டு கிராமங்களுக்குமிடையில் அமைந்துள்ளது. பொறகொடை என்பது ஒரு சிங்கள மொழிச் சொல்லாகும். 'சேற்றுக் குவியல்' என்பது இதன் பொருள். கல்லோயா இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்றது. ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாற்றின் ஒரு பகுதியில் சேறு குவிந்து கிடப்பதைக் கண்ட சிலர் பொறகொட (சேற்றுக்குவியல்) என அழைத்தனர். காலப்போக்கில் இது இவருக்குப் பெயராக மாறிவிட்டது. பொறகொடை சுமார் 300 வருடங்கள் பழமை வாய்ந்த கிராமமாகும். கொட்டபோவையிலிருந்தும் மல்கஸ்தலாவையிலிருந்தும் முஸ்லிம்கள் இங்கு குடியேறினர். சாதாரணமாக 80 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வந்தன. 1961ஆம் ஆண்டிலிருந்து இக்கிராமம் சிங்களவர்களுக்குச் சொந்தமானதாக மாறிவிட்டது. 4 குடும்பங்கள் இறுதியாக இங்கிருந்து இடம் பெயர்ந்தன.

பொறகொடை முஸ்லிம்களின் இடப்பெயர்வு மற்றுமோர் முஸ்லிம் கிராமத்தை உருவாக்கும் நோக்கிலேயே அமைந்திருந்தது. அதாவது பௌதீக வளங்கள் குறைவாகக் காணப்பட்ட ஒரு சூழலிலிருந்து வளம் பொருந்திய ஒரு சூழலுக்கு முஸ்லிம்கள் தம்மை இடம் மாற்றிக் கொண்டனர். அண்டியுள்ள கிராமமான கனுல்வெலை, பொறகொடைப் பிரதேசம் கைவிடப்பட்டவுடன் உருவான கிராமமாகும். கூடுதலான வயல் நிலங்கள், சேனைப் பயிர்ச் செய்கைக்கான வாய்ப்பு, நீர்ப்பாசன வசதிகள் என்பன கனுல்வெலையில் தாராளமாகக் கிடைத்தது. மட்டுமன்றி, பிரதான வீதியும் இவ்வூரை ஊடறுத்துச் சென்றது. இத்தகைய கவர்ச்சித் தன்மை பொறகொடையின் மறைவுக்கும் கனுல்வெலையின் தோற்றத்திற்கும் காரணமாக அமைந்தது. இதன்படி பொறகொடை ளளளளளமக்கள் ஓர் ஊரை அழித்து மற்றோர்

ஊரை உருவாக்கியுள்ளனர். இங்கு வாழ்ந்த ஒரு சிலர் இறக்காமத்திலும் சென்று குடியேறியமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலங்களில் பொறகொடையிலிருந்து குடிபெயர்ந்த முஸ்லிம்கள் அதிகமான நிலங்களை சிங்களவர்களுக்கு விற்றனர். தற்போது விரல் விட்டு எண்ணக்கூடிய, முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலப் பகுதிகள் மட்டும் இங்கு காணப்படுகின்றன. எனவேதான், முஸ்லிம்களுக்கும் இக்கிராமத்துக்குமிடையிலான தொடர்புகள் முழுமையாக அறுந்துபோயுள்ளன. பொறகொடையில் முஸ்லிம்கள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். பணத்தை செம்பிலிட்டுப் புதைத்து வைக்கும் பழக்கம் அவர்களிடம் இருந்தது. அத்தோடு மாடுகளை அறுத்து பலர் இணைந்து பங்குகளாகப் பகிர்ந்து கொள்ளும் பழக்கமும் இருந்தது. வீடுகள் களிமண் உருண்டைகளால் வரிச்சுச் சுவர்கள் மூலம் அமையப் பெற்றிருந்தன. இவ்வீடுகள் சாதாரணமாக 150 வருடகாலம் தாக்குப் பிடிக்கும் அளவு உறுதிமிக்கதாக அமைந்திருந்தன. வேளாண்மைச் செய்கை, சேனைப் பயிர்ச் செய்கை, கால் நடை வியாபாரம் (மாடு) என்பன இவர்களின் தொழிற்துறைகளாகக் காணப்பட்டன.

பொறகொடைக் கிராமத்தில் பள்ளிவாயல் ஒன்றும் அமையப் பெற்றிருந்தது. இது ஒரே மண்டபமாக, சற்று விசாலமானதாக ஜும்ஆத் தொழுகைக்கு ஏற்றவாறு மிம்பருடன் அமைக்கப்பட்டிருந்தது. மரத்தினால் தூண்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இது இம்மாவட்டத்தில் பழைமை வாய்ந்த பள்ளிவாயல்களுள் ஒன்றாக விளங்கியுள்ளது. 1927இல் இப்பள்ளிவாயல் உடைக்கப்பட்டு அதன் கட்டுமானப் பொருட்கள் சில, அதே ஆண்டில் கனுல்வெலையில் நிர்மாணிக்கப்பட்ட பழைய பள்ளிவாயலுக்குப் பயன்படுத்தப்பட்டன. தற்போது பொறகொடைப் பள்ளிவாயலின்

தடங்கள் கூட தென்படுவதில்லை. ஆபூபக்கர் மத்திச்சம் என்பவர் பொறகொடைப் பள்ளிவாயலின் தலைவராகப் பணி புரிந்துள்ளார். ஆபூபக்கர் மரணித்ததும் முஹ்யிதீன் பாவா என்பவர் மத்திச்சமானார். புலவனார் குடும்பத்தினர் ஆரம்பமாக பொறகொடையில் வாழ்ந்து பின்னர் கனுல்வெலைக்கு இடம் பெயர்ந்தனர். தற்போது இக்கிராமம் முஸ்லிம்களால் கைவிடப்பட்டு பெரும்பான்மை இனத்தவர்களால் சூழப்பட்ட ஒரு பகுதியாக மாற்றம் அடைந்துள்ளது. பள்ளிவாயல் அமைந்திருந்த நிலப்பகுதியும் சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமாகவுள்ளது.

5. முடிவுரை

முடிவாக, முஸ்லிம்கள் மத்திய காலப்பகுதியில்வர்த்தக ரீதியாக செல்வாக்குப் பெற்றிருந்ததுடன் வர்த்தகத்தின் போது அவர்கள் தங்கியிருந்து ஓய்வெடுத்த, குறிப்பாக கண்டி-கிழக்கு மற்றும் கண்டி-தெற்கு வர்த்தகப் பாதைகளில் காணப்பட்ட ஒவ்வொரு பிரதேசங்களும் முஸ்லிம் கிராமங்களாக தோற்றம் பெற்றுள்ளன என்பது தெளிவாகின்றது. அத்தோடு முஸ்லிம்கள் தமது வசதி கருதி மற்றும் அண்டிய நிலப்பிரதேசங்களில் காணப்பட்ட இயற்கை வளங்களால் ஈர்க்கப்பட்டு பல கிராமங்களைத் தோற்றுவித்தும் சில கிராமங்களைக் கைவிட்டுமுள்ளனர். கைவிட்டமை என்பது முழுமையாக அங்கிருந்த தமது நிலங்களை அல்லது வீடுகளை பெரும்பான்மையினத்தவருக்கு விற்பனை செய்தனர் என்பது அர்த்தமல்ல. மாறாக, அங்கிருந்து வெளியேறிய பின் படிப்படியாக தமது நிலங்களை சிங்களவர்களுக்கு விற்பனை செய்து வந்தனர். அண்மைக் காலம் வரை இவ்விற்பனை இடம்பெற்று வந்துள்ளது. வயல் நிலங்களை தம்முடன் நெருங்கிப் பழகிய சிங்களவர்களுக்கு நெடுங்காலமாக குத்தகைக்கு விட்டு வந்தனர். பின்னர் பராமரிப்பு தொடர்பில் ஏற்பட்ட அசௌகரிய நிலையால் அவற்றைக் குறித்த சிங்களவர்களுக்கு விற்பனை செய்து அப்பிரதேச நிலங்களை முழுமையாகத் துறந்தனர். கைவிடப்பட்ட கிராமங்கள் பற்றிய தகவல்கள் இவ்வாய்வில் அடையாளப்படுத்தப்படுவதன் நோக்கம் எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் இடம்பெறுவதனைத் தடுத்து நிறுத்துவதும் தற்கால சந்ததியினருக்கு இத்தகவல்களைத் தெரியப்படுத்துவதுமாகும். ஆகவே, இக்கிராமங்களின் தோற்றப் பின்னணி மற்றும் அவற்றில் முஸ்லிம்களின் செல்வாக்கு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மொனராகலை மாவட்ட முஸ்லிம்கள் தம் எதிர்காலத்தை திறம்பட திட்டமிட்டு செயற்படுத்துவார்கள் என்பது ஆய்வாளனின் எதிர்பார்ப்பாகும்.

## REFREFERENCE


1. அமீன், எம்.ஐ.எம். (2000). இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும், (1870-1915). ஹெம்மாதகம: அல் ஹஸனாத் பதிப்பகம்.

2. கந்தையா, வீ.சி. (1964). மட்டக்களப்புத் தமிழகம். பிரான்ஸ்:எக்சில் வெளியீடு.

3. கல்வி வெளியீட்டுத் திணைக்களம், (2006). வரலாறு. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

4. காதர், எம்.எல்.ஏ. (1997). வரலாற்றுப் பின்னணி. நூல்: அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள், பதிப்பாசிரியர்: எஸ்.எச்.எம். ஜெமீல், கொழும்பு:முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு. பப. 14-42.

5. சம்சுதீன் மௌலானா, ஜே.எம். (1997). வாழ்வியலும் பண்பாடும். நூல்: அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள், பதிப்பாசிரியர்: எஸ்.எச்.எம். ஜெமீல், கொழும்பு:முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு, பப.189-232.

6. சல்சபீல், எம்.எஸ்.எம். (2001). மொனராகலை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு. (வெளியிடப்படாத ஆய்வு).

7. நஜிமுதீன், ஏ.எம். (2002). முஸ்லிம்களும் கலவரச்சூழலும். மாத்தளை: ஏ.எம். நஜிமுதீன்.

8. மொனராகலை மாவட்ட செயலகம், (2007). மொனராகலை மாவட்ட நிருவாக படிநிலைத் தகவல்கள். (ஒன்லைன்) தகவல்: http://www.econsortium.info/Psychosocial_Forum_District_Data_Mapping/monaragala.pdf (Nk 25, 2015)

9. Gwillim Law, (2010). Administrative Subdivisions of Countries: A Comprehensive World Reference, 1900 through 1998. North Carolina: McFarland & Company.

10. DepartmentofCensusandStatistics-SriLanka,StatisticalAbstractoftheDemocraticSocialist RepublicofSriLanka, (2011). (ஒன்லைன்) தகவல்: http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2012Visualization/htdocs/index.php?usecase=indicator&action=DSMap&indId=10&district=Moneagala&Legend=3# (Vg;uy; 25, 2015)